# எண் வகை மெய்ப்பாடுகள்

**முனைவர் க. தமிழ்ச்செல்வன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முத்துரங்கம் அரசு கலைக்கல்லூரி
ஓட்டேரி, வேலூர்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

பேச்சு மொழித் தோற்றத்திற்கு முன்பே மனிதன் தன் உள்ளத்து உணர்ச்சிகளைத் உடலசைவுகளால் வெளிப்படுத்தினான். உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றும் புறக்குறிகள் மெய்ப்பாடுகள் எனப்படும். பாட்டில் புலவனின் உள்ளத்துணர்ச்சி இயல்பாகப் படிகின்றது. அவனது உணர்ச்சியைப் பாட்டுப் படிப்போர்க்குப் புலப்படுத்துதல் வேண்டும். பாட்டில் வெளிப்படும் புலவனின் உணர்ச்சி வெளிப்பாட்டை மெய்ப்பாடு எனலாம். குறுந்தொகை இலக்கியத்தில் படைக்கப்படும் மாந்தர்களின்மூலம், புலவன் தன் உணர்ச்சியினை வெளிப்படுத்துதலும் மெய்ப்பாடு என்பர். செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாக மெய்ப்பாட்டினைக் கூறுவர்.

மெய்ப்பாடு என்பது மெல்லியலார் மனஉணர்வினைத் தெரிவிக்கும் பகுதி; மக்களுக்கு இயற்கையாகத் தோன்றும் உணர்வுகளைச் சொல்லுகிறது. மெய்ப்பாடு என்பது மெய்ப்படு என்பதன் திரிபாகும். உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாக, உடலின் மேல் தோன்றும் புறக்குறிகள்தான் மெய்ப்பாடு எனப்படுகிறது. மெய்ப்பாட்டின் இயல்பைத் தொல்காப்பியர் கூறுகையில்,

> **“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**
> **மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்”[1]**

என்பர். அதாவது, உய்த்து உணர்வதால் அன்றி, இயல்பாகவே வெளிப்படும். உணர்ச்சிகளைச் செய்யுளில் புலப்படக் கூறுவது மெய்ப்பாடு என்பது புலனாகிறது. பேச்சுக்கள் உள்ளத்தில் எழும் எண்ணங்களின் வெளிப்பாடுகளாக இருப்பதால் அவற்றை மெய்ப்பாடுகள் எனலாம். மேலும், உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக அமையும் பேச்சுகளே மெய்ப்பாடு. குறிப்பாக, மெய்ப்பாடு என்பது இயல்பாக எழும் உள்ளக்கிளர்ச்சியின் வெளிப்பாடு ஆகும். “மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று”[2] என்பர் இளம்பூரணர். செய்யுளுக்குரிய உறுப்புகளுள் இன்றியமையாதது மெய்ப்பாடு ஆகும். அது பாடு என நீண்டு, முதனிலைத் திரிந்த தொழிற்பெயராகின்றது.

மெய் + படு = மெய்ப்படு (மெய்ப்பாடு)
மெய் (உடல்) + படு (தோன்றுதல்)

அதாவது, உணர்ச்சி மெய்யில் (புற உடலில்) புறத்தே புலப்படுத்தும் நிலை மெய்ப்பாடு எனலாம். வடநூலார் நவரசம் என்று இதனைக் குறிப்பிடுவர். புற உடலில் வெளிப்படுதல் மெய்ப்பாடு. படு என்பது தொழிற்பெயர், பாடு என்பது முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்.

**உரையாசிரியர் கூற்று**

"மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி; ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்"[3] என்பர் பேராசிரியர்.

தொல்காப்பியனாரின், "தலைவரு பொருண்மையின் மெய்ப்பட" என்ற தொடரைப் "பொருட்டு" எனக் கொள்கின்றார். பேராசிரியர், "பொருள் உள் நிகழும் உணர்ச்சி வெளிப்படுதல் மெய்ப்பாடு" எனப் பெயர் பெறும் என்பர். "மெய்ப்பாடு என்பது அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் இயற்புறவுடற் குறியாம்."[4] என்பர் ச.சோமசுந்தர பாரதியார்.

**நாடகவியலார் கூற்று**

"உலகத்தார் உள்ள நிகழ்ச்சி மெய்யில் தோன்றும் புற உடற்குறிகளால் காண்போர்க்குப் புலனாகும் தன்மையே மெய்ப்பாடு எனப் பெறும்."[5] இதுகாறும் கூறப்பட்டுள்ள கருத்துகளைக் காண்கையில், மெய்ப்பாடு கீழ்க்கண்ட நிலைகளாக வெளிப்படுகிறது. "உலகத்தார் உள்ளத்துள் இயல்பாக எழும் உணர்ச்சிகளின் வெளிப்பாடே மெய்ப்பாடு"[6] என்பர் பேராசிரியர். சத்துவம் (விறல்) என்பது மெய்யின் கண் நிகழும் மாற்றம் ஆகும். எண்ணான்கு பொருள்கள் இன்னவை என்பதையோ அவை, பதினான்காகக் குறைதல் பற்றியோ, பதினாறு எட்டாவது பற்றியோ தொல்காப்பியனார் யாதும் குறிப்பிடவில்லை.

"எண்வகை மெய்ப்பாட்டுப் பொருளாகும்,உணர்வுகள் முப்பத்திரெண்டு என்றும் அவை, சுவை பொருந்தப் புலப்படும் மெய்ப்புறக் குறியால் நான்கு நான்காகத் தொகுத்து எண்ணப் பெறும்."[7] என்று கூறுகின்றார் ச.சோ. பாரதியார். இவர் இளம்பூரணர் கருத்தோடு உடன்பட்டுச் செல்கின்றார். முப்பத்திரெண்டு, பதினாறு, எட்டு என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கத்தை ஏற்க மறுக்கின்றார். பேராசிரியர் வடமொழி மரபைப் பின்பற்றிச் செல்கின்றார். அவர் கூறும் சுவைப் பொருள், சுவையுணர்வு, சுவைக்குறிப்பு, விறல் என்ற நாடகத்திற்குரிய சொற்கள் யாவும் தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை. தொல்காப்பியனார் செய்யுளுக்குரிய மெய்ப்பாடுகளையே மெய்ப்பாட்டியலில் வகுத்தளித்துள்ளார். இதனைச் செய்யுளியலிலும் குறித்துச் செல்கின்றார். எட்டு மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் நான்கு நான்கு உணர்ச்சிகளைக் குறிப்பிடுகின்றார். நானான்கு எனத் தொல்காப்பியனார் கூறுவது, ஒவ்வொரு மெய்ப்பாடும் நான்கு உணர்ச்சிகளால் தோன்றும் என்பதையே இது குறிக்கும். இக்கருத்திற்கு, "உள்ளுணர்வுகளின் தொகுதியாகத் தோன்றும் அனுபவங்களின் அடிப்படையில் எழும் முப்பத்திரெண்டு உணர்ச்சிகளும், முறையே நான்கு நான்காகத் தொகுத்துக் காணின் எட்டு வகை மெய்ப்பாட்டிற்கும் காரணமாக அமையும்."[8] என்று தா.ஏ.ஞானமூர்த்தி கூறும் விளக்கம் அரணாகின்றது.

**மெய்ப்பாட்டுணர்ச்சி**

செய்யுளுக்குரிய உறுப்புகளுள் இன்றியமையாதது மெய்ப்பாடு ஆகும். தொல்காப்பியனார் "உணர்ச்சி என்னாது" "மெய்ப்பாடு" எனச் செய்யுள் உறுப்பைக் குறித்த தன் நோக்கம் நுட்பம் வாய்ந்தது. உணர்ச்சி என்ற சொல்லைத் தொல்காப்பியனார் யாண்டும் குறிக்கவில்லை. பாடலில் உணர்ச்சியைக் குறித்தால் அதைப் படிப்போர் எளிதில் அறிதல் இயலாது. ஒருவர் உணர்ச்சியுறுகின்றார் என்றால் அவர் உற்ற உணர்ச்சியை அவரால் மட்டுமே எளிதில் உணரமுடியும். காண்போர் அறிய

இயலாது. மெய்ப்பாடுகளால் மட்டுமே உணர்ச்சியை எளிதில் அறிந்துகொள்ள இயலும். நேரடி மனித வாழ்வில் மெய்ப்பாடு இத்துணை இன்றியமையாததென்றால், செய்யுளில் அதன் இன்றியமையாமை புலப்படும்.

செய்யுள் செய்வோர் (புலவர்) படைக்கும் மாந்தர்களின் உணர்ச்சிகளைக் குறிக்காது. உணர்ச்சிகளால் அவர்கள் அடையும் மெய்ப்பாடுகளையே குறித்தனர். இதனால், பாட்டைப் படிப்போர் அம்மாந்தர்களின் மெய்ப்பாட்டை அறிந்து அவர்களின் உணர்ச்சியோடு ஒன்றுதல் எளிதாகின்றது. தொல்காப்பியனார் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகிய "உணர்ச்சியை" அதன் வெளித் தோற்றமாகிய "மெய்ப்பாடு" எனக்குறித்து, அதற்கெனத் தனி இயலை வகுத்தளித்த, தன் நோக்கமும் நுட்பமும் விளக்கமாகின்றன.

**பேச்சு மெய்ப்பாடு**

உணர்ச்சிகளின் வெளிப்பாட்டு நிலைகளில் பேச்சும் ஒன்று. உணர்ச்சிப் புலப்பாட்டு நிலையில் அமையும் பேச்சு ஒரு "மெய்ப்பாடு" ஆகும். வாழ்த்தல், இல்வலியுறுத்தல், பாராட்டெடுத்தல், மடந்தபவுரைத்தல், கலங்கி மொழிதல், கையறவுரைத்தல், அறனழித்துரைத்தல், முட்டுவயிற்கழறல், மறைந்தவையுரைத்தல் என்பனவும் பேச்சு மெய்ப்பாடுகளாகும். இதனால் உணர்ச்சிப் புலப்பாட்டுக் கருவிகளுள், பேச்சையும் மெய்ப்பாடாகத் தொல்காப்பியனார் கருதினார் என்பது புலனாகின்றது. "செய்யுளில் படைக்கப்படும் தலைவன், தலைவி முதலியோர், தம் உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் பேச்சுக்களையும் மெய்ப்பாடாகத் தொல்காப்பியனார் கொண்டார்."[9] எனவும், "பேச்சுக்கள் உள்ளத்து எண்ணங்களின் வெளிப்பாடுகளாக இருப்பின், அவை உறுதியாக மெய்ப்பாடு களாகக் கொள்ளத் தக்கனவாகும். தொல்காப்பியம் தரும் மெய்ப்பாட்டுப் பட்டியல்களை நுணுகி ஆராய்வோமாயின் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக அமையும் பேச்சுக்களே மெய்ப்பாடுகள் எனப்பெறும் என்பது புலப்படும்."[10] இவ்வாறு கருதுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவே அமைகின்றது. என கு.சுந்தரமூர்த்தி கூறுவது ஈண்டுக் கருதத்தக்கது. வடமொழி இரசச் சிந்தனையாளர்களிடையேயும் பேச்சை மெய்ப்பாடாகக் கொள்ளும் கருத்து நிலவுகின்றது. பரதரும் பேச்சை அபிநயங்களில் ஒன்றாகக் கொண்டார். அவர் பேச்சு அபிநயத்தை "வாசிக அபிநய" என அழைத்தார். "நி" என்ற வேர்ச்சொல் "எடுத்துச் செல்" என்னும் பொருளுடையது. அத்துடன் "அபி" என்ற முன் ஒட்டுச் சேர "நோக்கி" என்ற பொருள் பெறப்பட்டது என்பர் பரதர். அதாவது, பாத்திரங்களின் உணர்ச்சிகளைப் பார்வையாளர்களுக்கு, படிப்பவர்களுக்கு எடுததுச் செல்வது என்னும் பொருளுடையது என்பர்.

**சுவை மெய்ப்பாடு**

"சுவை" எனும் சொல்லால் மெய்ப்பாட்டைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறித்துள்ளனர். அடியார்க்கு நல்லாரும் மெய்ப்பாட்டைச் "சுவை"[11] என்றே குறித்துள்ளார். மேலும், கு.கோதண்டபாணி பிள்ளை, மெய்ப்பாட்டைச் "சுவை" எனக் குறிப்பது சிறப்பாகும். ஆனால், வடமொழியாளர் செல்வாக்கிற்குட்பட்டது உரையாசிரியர்கள் காலம். ஆதலால், வடமொழியாளர் கூறும் இரசத்தின் தமிழாக்கமானச் சுவையால் மெய்ப்பாட்டைக் குறித்தனர்.
தண்டியாசிரியரும்,

> **"உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற**
> **எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே"[12]**

எனக் கூறியுள்ளமையைக் காணலாம். எனவே, இடைக்காலத்தில் மெய்ப்பாட்டைச் சுவை என்ற சொல்லலால் குறிப்பிடும் வழக்கம் இருந்தமை புலனாகின்றது. "மெய்ப்பாடு' என்பதும் 'சுவை' என்பதும் ஒன்றே"[13] என ந.சுப்புரெட்டியார் கருதுகின்றார்.

**உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும் - வகை, தொகை விளக்கம்**

தொல்காப்பியனார் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுகின்றார். இம்மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நான்கு நான்கு உணர்ச்சிகளால் தோன்றுமெனக் கூறுகின்றார். இவை அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவை. எண்வகை மெய்ப்பாடுகளும் அவற்றிற்குரிய உணர்ச்சிகளும் வருமாறு,

| மெய்ப்பாடுகள் | உணர்ச்சிகள் |
|---|---|
| நகை - எள்ளல், | இளமை, பேதைமை, மடன். |
| அழுகை - இளிவு, | இழவு, அசைவு, வறுமை. |
| இளிவரல் - மூப்பு, | பிணி, வருத்தம், மென்மை. |
| மருட்கை - புதுமை, | பெருமை, சிறுமை, ஆக்கம். |
| அச்சம் - அணங்கு, | விலங்கு, கள்வர், இறை. |
| பெருமிதம் - கல்வி, | தறுகண், இசைமை, கொடை. |
| வெகுளி - உறுப்பறை, | குடிகோள், அலை, கொலை. |
| உவகை - செல்வம், | புலன், புணர்வு, விளையாட்டு. |

இவை முப்பத்திரெண்டும் எண்வகை மெய்ப்பாடுகள் தோன்றுவதற்குரிய உணர்ச்சிகள் ஆகும்.

**அகத்திணை மெய்ப்பாடுகள்**

தொல்காப்பியனார் அகத்திணை மெய்ப்பாடுகள் அறுபத்தி மூன்றினைக் கூறுகின்றார். அவை, களவிற்கும் கற்பிற்கும் உரியன. களவுக்கால மெய்ப்பாடுகள்,

1. களவுக்குரிய மெய்ப்பாடுகள்
2. கற்புக்கால மெய்ப்பாடுகள்
3. பிரிவுக்கால மெய்ப்பாடுகள் (களவு, கற்பு)
4. வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள் எனும் நான்கு பிரிவுகளாகும்.

**களவுக்குரிய மெய்ப்பாடுகள்**

புகுமுகம் புரிதல் முதலாகக் கையறவுரைத்தல் ஈறாகக் கூறப்படும் இருபத்தி நான்கு (24) மெய்ப்பாடுகளும், தலைவன், தலைவி சந்திப்பு முதல் களவு வெளிப்படுங்காறும் ஆறு முறைகளாக நிகழ்வன. ஒவ்வொரு நிகழ்வுக்கும் நான்கு மெய்ப்பாடுகளாக வகைப்படுத்துகின்றார் தொல்காப்பியனார். பொதுவாக, இவைப் படிப்படியாக நிகழ்வன. இவற்றை, "சந்திப்பு முதல் புணர்ச்சிகாறும் நிகழ்வன, புணர்ச்சிக்குப் பின் களவு வெளிப்படுங்காறும் நிகழ்வன."[14] என இரண்டாகப் பிரிக்கலாம்.

**பிரிவுக்கால மெய்ப்பாடுகள்**

இன்பத்தை வெறுத்தல் முதலாகக், கலக்கம் ஈறாகக் கூறப்படும் இருபது (20) மெய்ப்பாடுகள், காதலரிடையே பிரிவுக்காலத்தில் தோன்றுவன. இவற்றில் சில களவிலும், சில களவு, கற்பு என்ற இரு வகையிலும் பயின்று வருகின்றன. இவற்றைப் பிரிவுக்கால மெய்ப்பாடுகள் எனலாம்.

**வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள்**

முட்டுவயிற் கழறல் முதலாகக் கட்டுரையின்மை ஈறாக எட்டு மெய்ப்பாடுகளைக் கூறுகின்றார். இவை, தலைவனை வரைவுக்கு முடுக்கும்பொருட்டுத் தலைவிபால் நிகழ்வனவாகும்.

**கற்புக்கால மெய்ப்பாடுகள்**

வரைவுக்குப் பின்னர், கற்புக்கால மெய்ப்பாடுகளாகத் தெய்வமஞ்சல் முதலாகப் புறஞ்சொல் மாணாக்கிளவி ஈறாகப் பதினோரு மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியனார் கூறுகின்றார்.

**உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும்**

நகை முதலான எண் வகை மெய்ப்பாடுகளுக்கும் உரிய உணர்ச்சிகள் முப்பத்திரெண்டு (32). அடுத்து உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளுமாகக் கூறும் முப்பத்திரெண்டில், உணர்ச்சிகள் இருபத்தியொன்று (21), ஆக ஐம்பத்தி மூன்று (53) உணர்ச்சிகளைக் கூறுகின்றார். அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவை எட்டு மெய்ப்பாடுகள், அடுத்து உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளுமாகக் கூறும் முப்பத்திரெண்டில், இரு திணைக்கும் பொதுவாக மெய்ப்பாடுகள் பதினொன்று. களவுக்கால மெய்ப்பாடுகள் இருபத்தி நான்கு. பிரிவுக்கால மெய்ப்பாடுகள் களவு, கற்பு, என்று இருபதாகும். வரைவுக்கு நிமித்தமான எண்பத்திரெண்டு மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியனார் கூறுகின்றார்.

**உணர்ச்சிகள் அளவில்**

எண்வகை மெய்ப்பாடுகளுக்குரிய உணர்ச்சிகளைக் கூறிய தொல்காப்பியனார் மேற்கொண்டு கூறும் மெய்ப்பாடுகளுக்குரிய உணர்ச்சிகளைக் குறிப்பிட்டாரல்லர். ஒன்றுக்கு மேற்பட்ட மெய்ப்பாடுகள் ஒரே உணர்ச்சியால் தோன்றக்கூடும் என்பதறிந்த தொல்காப்பியனார், அவைகளுக்கு உணர்ச்சிகளைக் குறிப்பிடாமல் விட்டார் எனக் கருத இடமிருக்கிறது. இதனால் உணர்ச்சிகள் இத்துணையென வரம்பிட்டுக் கூறல் இயலாததாகின்றது. மேலும், சி.டி. வின்செஸ்டர், "இலக்கிய உணர்ச்சிகள் எண்ணிலடங்கா, அவற்றை வரையறுப்பதும், வகைப்படுத்துவதும் தவறாகவே முடியும்."[15] எனக் கூறுவது ஈண்டுக் கருதத்தக்கது.

**மெய்ப்பாடுகள் அளவில்**

அகம், புறம் என்பன இரண்டிற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் என்று வகைப்படுத்திக்கூறும் தொல்காப்பியனார் களவுக்கால மெய்ப்பாடுகளை அடுத்து,

> **"அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
> **மன்னிய வினைய நிமித்தம் என்ப."[16]**

எனக் கூறகின்றார், மேற்கூறப்பட்ட இருபத்திநான்கு மெய்ப்பாடுகளைப் போன்றே, பிற மெய்ப்பாடுகளும் அவற்றின் பகுதிகளாக வருவன, இவற்றில் பிற மெய்ப்பாடுகளும் உள்ளன எனத் தொல்காப்பியனார் கூறுவதால் மெய்ப்பாடு களையும் இத்துணையென வரம்பிட்டுக் கூறல் இயலாததாகின்றது. இவ்வாறு தொல்காப்பியனார் தம் காலத்துப் பயின்று வந்த இலக்கிய உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் வகைப்படுத்திக் கூறுகின்றார்.

அவர் மெய்ப்பாட்டியலில் கூறுவனவே இலக்கிய உணர்ச்சிகள் என்று கொள்வது கூடாது. முருகியல் உணர்ச்சி, பக்தி உணர்ச்சி, சீர்திருத்த உணர்ச்சி, தேசிய உணர்ச்சி பாடல்களும், சீர்திருத்த உணர்ச்சிப் பாடல்களும், நாட்டு உணர்ச்சிப் பாடல்களும் தோன்றவில்லை எனக் கொள்வதே பொருத்தமாகும்.

**இரசமும் மெய்ப்பாடும் - ஒப்புமை**

பரதர் எண்வகை இரசங்களும், தொல்காப்பியனார் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகளும் ஒருங்கு வைத்துக் கூறப்படுகின்றது.

சிருங்காரம் (Erotic) - உவகை
வீரம் (Haroic) - பெருமிதம்
கருணை (Pathetic) - அழுகை
உறாஸ்யம் (Comic) - நகை
உருத்திரம் (Farocious) - வெகுளி
பயானகம் (Fearful) - அச்சம்
பீபற்சம் (Papulsive) - இளிவரல்
அற்புதம் (Wonderful) - மருட்கை

இவ்வொப்புமை பெயரொற்றுமையே. இவ்வொற்றுமையானது, "கருத்தளவில் முழுதும் பொருந்தும் எனக் கூறல் இயலாது."[17] என்பார் சுப்புரெட்டியார். மேலும், சுவைகளிடையே நிலவும் கருத்து வேற்றுமைகளைக் குறிப்பிடுகின்றார்.

மெய்ப்பாடு என்பது இயல்பாக எழும் உள்ளக்கிளர்ச்சியின் வெளிப்பாட்டைக் குறிப்பதாகும். பாவம் என்பது இயல்பாக எழும் உள்ளக் கிளர்ச்சியன்று. ஒன்றைப் போல் வேண்டும் என எண்ணிப் பாவிப்பது. ஒரு பொது மரபையே இருவரும் பின்பற்றியிருக்கின்றனர். இரண்டிலும் பல ஒற்றுமைக் கூறுகள் இருப்பினும், ஒவ்வொன்றும் தனித்தன்மையைக் கொண்டது. உறக்க நிலையிலுள்ள உள்ளத்திலிருந்து உடற்கூறு வாயிலாக எழுகின்ற உணர்ச்சிகள் பலதிறப்பட்டன. அவைகள் மெய்ப்பாடுகளாக வெளிப்படுகின்றன.

**உள்ளக்கிளர்ச்சி மெய்ப்பாடுகள்**

உள்ளக்கிளர்ச்சி (Emotion) வேறு மெய்ப்பாடு வேறு. ஆனால், ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. உணர்ச்சியிலிருந்து உள்ளக்கிளர்ச்சியும், உள்ளக்கிளர்ச்சியிலிருந்து மெய்ப்பாடும் பிறக்கின்றன. உணர்ச்சிதான் மெய்ப்பாட்டின் அடிப்படை. உணர்ச்சியின் தூண்டலால் (Stimulus) உள்ளக்கிளர்ச்சியும், உள்ளக்கிளர்ச்சியின் தூண்டலால் (Response) மெய்ப்பாடும் பிறக்கின்றன. உள்ளக்கிளர்ச்சிகளின் கோட்பாடு உடலையும் உள்ளத்தையும் சார்ந்த உட்புற, வெளிப்புற நிகழ்வுகளைக் கொண்டது. உள்ளக்கிளர்ச்சிகள் மூன்று வகையாக மெய்ப்படுகின்றன எனக் கூறுகின்றார் ஹோலலட்ஸ்மேன் அவை:

வாய் வழி உணர்ச்சிமயமாக வெளிப்படும் பேச்சுகள். உடல் வழி இவை தாமே நிகழும் தானியங்கு உறுப்புகளாகிய இதயம், நுரையீரல், குடல் முதலிய உடல் உள்ளுறுப்புகளில் நிகழும் மாற்றங்களும், கை, கால் போன்ற வெளி உறுப்புகளில் நிகழும் மாற்றங்களும் இதில் நிகழும். நடத்தை வழி (Behavioural response) முகமெய்ப்பாடுகளும் (உடம்பில் தோன்றும்) இதில் அடங்கும். உள்ளக்கிளர்ச்சியால் உண்டாகும் உடலின் உட்புற, வெளிப்புற மாற்றங்கள் உள்ளம், உடல் என்னும் இரண்டாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பர் ஹோால்டஸ்மேன்.

**முகமெய்ப்பாடுகள் (Facial Expression of Emotion)**

முகமெய்ப்பாடுகள் பற்றியும் உளவியலார் ஆய்ந்துள்ளனர். உள்ளக்கிளர்ச்சிகளின் ஷமுதன்மை இடம் முகமே என்கின்றார். மனம் உணர்வதை முகம் காட்டிவிடும்.

> **"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
> **கடுத்தது காட்டும் முகம்."[18]**

என வள்ளுவர் கூறுவது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பாலும் எல்லாவிதமான மனவெழுச்சிகளும் கணவியல்புகளும் முகமெய்ப்பாடுகளைக் கொண்டுள்ளன. இவ்வெளிப்பாடுகளைக் கொண்டு

மனவெழுச்சியை எப்போதும் உறுதி செய்ய முடியாது. குரல் ஒலியும் அதனோடு சார்ந்த மாற்றங்களும் மெய்ப்பாடுகள் நிகழக் காரணமாக அமைகின்றன. அதன் அடிப்படையில் தான் பேச்சு மெய்ப்பாடு தோன்றுகின்றது. உள்ளத் தொடர்பு, வெளித் தொடர்பு ஆகிய இரண்டிற்கும் உள்ளக்கிளர்ச்சி, அது சார்ந்த செயல்கள் ஆகியவை நிகழப் பேச்சமெய்ப்பாடும் காரணமாக அமைகின்றது.

இப்பேச்சு மெய்ப்பாடு உணர்ச்சிகள் நிரம்பியதாகும். இத்தோடு தோன்றும் முகமெய்ப்பாடுகளும், உள்ளக்கிளர்ச்சிகளில் ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாட்டைத் தனித்தனியே ஆக்குகின்றன. குரல்வளையும் பேச்சும் அக்குறிப்பிட்ட உள்ளக்கிளர்ச்சியை அப்படியே வெளிப்படுத்த முயல்கின்றன. பேச்சு மெய்ப்பாடு என்பது தனக்குத் தானேயும் மற்றவர்களோடும் உள்ளக்கிளர்ச்சியை வெளிப்படுத்துவதில் முதன்மை பெறுகின்றது. உள்ளத்தின் கிளர்ச்சி நிலையே உள்ளக்கிளர்ச்சியாகும் என்பதும் அதன் விளைவாக உடலின்கண் தோன்றும் மாற்றங்கள் மெய்ப்பாடுகள் என்பதும் பெறப்படுகின்றன. உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் இத்துணையென வரம்பிட்டுக் கூற இயலாது. இக்கருத்தினைத் தொல்காப்பியனாரும் திறனாய்வாளர்களும் ஒப்புகின்றனர்.

தொல்காப்பியனார் குறிப்பிடும் மொத்த உணர்ச்சிகள் ஐம்பத்தைந்து, மெய்ப்பாடுகள் எழுபத்தொன்பது ஆகும். உணர்ச்சிகள் எட்டு எனவும் இரு வகையான கருத்துகள் திறனாய்வாளர்களிடையே நிலவுகின்றன. இலக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சிகளைக் கற்போர்க்கு எளிதில் புலப்படுத்தும் கருவியே மெய்ப்பாடு. ஆதலால், உணர்ச்சி எனக் குறிப்பிட வேண்டிய செய்யுளுறுப்பைத் தொல்காப்பியனார் மெய்ப்பாடு என்றே குறித்துள்ளமையை இவ்வியல் சுட்டுகிறது. உணர்ச்சியின் வெளிப்பாடாகத் தோன்றும் பேச்சும் “மெய்ப்பாடு” என அழைக்கப்பெறும். தொல்காப்பியனாரும், வடமொழியாளரும், உளநூலாரும் உணர்ச்சியின் வெளிப்பாடாகத் தோன்றும் பேச்சை மெய்ப்பாடாகக் கொள்கின்றனர். மூளைப்புறணி, மூளைமேற்பூத்தண்டு, மூளைத்தண்டு என்பன உள்ளக்கிளர்ச்சியைத் தோற்றுவிக்கும் முதன்மை உறுப்புகளாகும். உள்ளக்கிளர்ச்சி வெளிப்பாட்டில் உடல் உட்புற, வெளிப்புற மாற்றங்களும், முகமெய்ப்பாடுகளும் பேச்சு மெய்ப்பாடுகளுள் அடங்கும். உள்ளக்கிளர்ச்சியும் அது சார்ந்த மெய்ப்பாடுகளும் தோன்ற சூழலும் காரணமாகின்றது. எனவே, மெய்ப்பாட்டைக் கொண்டு உள்ளக்கிளர்ச்சியை அறியும் சூழலை அறிவது இன்றியமையாதது. உள்ளக்கிளர்ச்சிகள் நடத்தைத் தோன்றக் காரணமாகின்றன. வெளித்தோன்றும் மெய்ப்பாடுகளால் ஒருவரின் நடத்தையை எளிதில் அறியலாம். உணர்ச்சி, உள்ளக்கிளர்ச்சி, மெய்ப்பாடு என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறுபாடுடையவையாயினும் அடிப்படையில் தொடர்புடையவை. உணர்ச்சியில் இருந்து உள்ளக்கிளர்ச்சியும், உள்ளக்கிளர்ச்சியிலிருந்து மெய்ப்பாடும் தோன்றுகின்றன.

## குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ப - 4,
2. மேற்படி - நூற் - 3, ப - 31.
3. மேற்படி - நூற் - 1, பேராசிரியர் உரை, ப - 40.
4. சோமசுந்தர பாரதியார். ச. (உ.ஆ) தொல்காப்பியப் பொருட்படலப்புத்துரை, மெய்ப்பாட்டியல், ப - 18,
5. தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப - 3,
6. மேற்படி, நூ - 1,
7. சோமசுந்தர பாரதியார்.ச. (உ.ஆ) தொல்காப்பியப் பொருட்படலப்புத்துரை.
8. ஞானமூர்த்தி.தா.ஏ, இலக்கியத் திறனாய்வியல், ப - 93,
9. Sundaramoorthy.G. Early Literary the ories in Tamil. P - 91.

10. மேற்படி, ப - 92.
11. சாமிநாதையர்.உ.வே. ப.ஆ, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, ப - 83,
12. கோதண்டபாணி. தி, கம்பரும் மெய்ப்பாட்டியலும், பக். - 16, 17,
13. சுப்பிரமணிய தேசிகர். (உரை) தண்டியலங்காரம், நூற் - 21,
14. சுப்புரெட்டியார்.ந.தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப - 274.
15. C.T.Winchestar, principles of literary criticism, p.63.
16. சுப்பிரமணியம்.ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, ப - 488, நூ - 12.
17. சுப்புரெட்டியார்.ந., கவிதையனுபவம், பக் - 253, 254,
18. இராமசாமி.ம., திருக்குறள் தெளிவுரை, ப - 145, குறள் - 706.